**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**

**<u>அசல் வழக்கு எண். 129 /2020</u>**

பெயர் – திரு. சுடலையாண்டி வா.சா.1

த/பெ – இசக்கிமுத்து

கிராமம் – வேப்பிலான்குளம்

தாலுகா – இராதாபுரம்

தொழில் – விவசாயம்

வயது – 56

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை –</u>**

நான் இந்த வழக்கின் வாதி. எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுகிறது.

1. 27.01.2006 அன்று வாதி பெயருக்கு ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் 258/2006 சான்றிட்ட நகல் – வாசாஆ.1

2. தபசில் சொத்து குறித்து 1ம்பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் 117/2012 சான்றிட்ட நகல் – வாசாஆ.2

3. தபசில் சொத்து குறித்து 2ம்பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் 473/2019 சான்றிட்ட நகல் – வாசாஆ.3

4. 05.01.2012 தேதிய இராதாபுரம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி செல்லான் ரசீது **அசல் – வாசாஆ.4**

5. 05.03.2014 அன்று திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு நகல் – வாசாஆ.5

6. 22.03.2014 அன்று தமிழ்நாடு பத்திரப்பதிவுதுறை அவர்களுக்கு அனுப்பிய மனு நகல் – வாசாஆ.6

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.04.08 17:40:42 +0530

7. 09.01.2015 தேதிய மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த உத்தரவு நகல் – வாசாஆ.7

8. தமிழக முதலமைச்ரின் தனிப்பிரிவு அதிகாரிக்கு அனுப்பிய புகார் மனு ஒப்புகை **இரசீது அசல் – 4 – வாசாஆ.8**

9. நில அபகரிப்பு வழக்கை மாநில குற்ற புலனாய்வுதுறைக்கு மாற்றிட கோரி 15.09.2016 மற்றும் 22.06.2017 ம் தேதிய மனு நகல் – வாசாஆ.9

10. தபசில் சொத்து பட்டா மாறுதல் 1ம்பிரதிவாதியின் கோரிக்கை மனு தள்ளுபடி செய்த உத்தரவு நகல் நாள், 15.02.2017– வாசாஆ.10

11. வாதியிடம் ரூ. 8,20,000/– பெற்றுக்கொண்டதற்கு இ 3ம் பிரதிவாதி 02.02.2011 அன்று எழுதிக்கொடுத்த பணப்பற்று ரசீது நகல் – வாசாஆ.11

12. மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் ஆஜராக வாதிக்கு வந்த அறிவிப்பு கடிதம் **அசல் – 3 – வாசாஆ.12**

13. தமிழக காவல்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிய மனுவின் அஞ்சலக ஒப்புதல் அட்டை **அசல்** – 3– வாசாஆ.13

14. பதிவுத்துறை தலைவர் அவர்களுக்கு அனுப்பிய மனுவின் அஞ்சலக ஒப்புதல் அட்டை **அசல்** – 3– வாசாஆ.14

15. தமிழக முதலமைச்சரின் மனு கோரிக்கை ரசீது **அசல்** – 3 – வாசாஆ.15

16. சேரன்மகாதேவி சார் ஆட்சியரின் நேரடி விசாரணை அறிவிப்பு கடிதம் – **அசல்–** வாசாஆ.16

17. பதிவுத்துறை தலைவர் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிய கடிதங்கள் – **அசல்** வாசாஆ.17

18. 14.09.2017 தேதிய தினத்தந்தி நாளிதழ் பத்திரிக்கை செய்தி **அசல் – வாசாஆ.18 .**

( வாசாஆ.1 முதல் 3 மற்றும் 5 முதல் 7, 9 முதல் 11 ஆவணங்கள் அசல் ஆவணங்கள் இல்லை என்பதால் நிரூபணத்திற்கும் ஆட்சேபனைக்கும் தொடர்புடைமைக்கும் உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. )

பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுதலின் பேரில் குறுக்கு விசாரணை 22.04.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.04.08 17:40:47 +0530